**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 82/2017**

**Deposition of P.W.** 9

Name : திரு. ரவீந்திரன்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**01.04.2026**

**Accused Present.**

முதல் விசாரணை–

நான் தமிழ்நாடு காவல்துறையில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்று தற்போது குழித்துறையில் வசித்து வருகிறேன். இதற்கு முன்னர் தக்கலை காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றிய போது 20.02.2010ம் தேதி 21.45 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்த போது செந்தில்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைபடி நிலைய குற்ற எண். 145/2010 பிரிவுகள் 294(பி) 324, 307 மற்றும் 379, 506(2) இ.த.ச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5. அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி விட்டு ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும், காவல்நிலையத்திற்கும் இடையே 100 மீட்டர் தூரம் இருக்கும். திற்பரப்பு செல்லக்கூடிய பேரூந்துகள் தக்கலை பேரூந்து நிலையத்தில் நிற்கும்

என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. புகார் மனுவை காவல்நிலையத்தில் வைத்து எழுதவில்லை. வந்த உடன் புகார் மனுவை தந்தார். முதல் தகவல் அறிக்கையில் வழக்கறிஞர் திரு. அல்போன்சை பார்க்க வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை. நான் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. தவறான தகவலின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல.